## 1. மறைமலை அடிகள்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | சாமி வேதாச்சலம் |
| **பெற்றோர்** | சொக்கநாதர் சின்னம்மையார் |
| **ஊர்** | திருக்கழுக்குன்றம் |
| **காலம்** | 15-7-1876 முதல் 15-09-1950 வரை |
| **மகள்** | நீலாம்பிகை அம்மையார் |

- தமிழையும் வடமொழியையும் ஆங்கிலத்தையும் நன்கு கற்றவர்.
- தமிழை வடமொழி கலப்பின்றி தூய நடையில் எழுதி பிறரையும் ஊக்குவித்தார்.
- தனித்தமிழ் இயக்கத்தை தொடங்கினார்.1916- இல் தம் பெயரில் மறைமலை வேதம் மறை அசலம் மலை என்று தனித்தமிழில் மாற்றிக் கொண்டார்.
- நாகையில் நாராயணசாமி பிள்ளை அவர்களிடம் தமிழ் கற்ற சைவ சித்தாந்த சண்டமாருதம் என புகழப்பட்ட சோமசுந்தர நாயக்கர் அவர்களிடம் சைவ சித்தாந்தம் கற்றார்.
- சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் பரிதிமாற் கலைஞருடன் இணைந்து தமிழ் பேராசிரியராக பணியாற்றினார்.
- 1905-இல் சைவ சித்தாந்த மகா சமாசம் என்ற அமைப்பை தோற்றுவித்தல்.திருமுருகன் அச்சுக்கூடத்தை ஏற்படுத்தி பல நூல்களை வெளியிட்டார்.
- பல்லாவரம் முனிவர் என்றும் அழைக்கப்பட்டார்.
- சங்க இலக்கியங்களில் முதன் முதலில் மக்களிடையே பரப்பிய பெருமைக்குரியவர்.
- ஞானசாகரம் என்ற இதழை அறிவு கடல் என பெயர் மாற்றம் செய்து நடத்தினர்.

### இவரின் சமகாலத்தில் வாழ்ந்த தமிழறிஞர்கள்

- மனோன் மணியம் சுந்தரனார்
- வ.சு செங்கல்வராயர்
- பெரும் புலவர்
- ரசிகமணி டி.கே.சிதம்பரநாதர்
- கதிர்வேலர்
- பேராசிரியர் வையாபுரியர்
- திரு.வி.க
- கோவை ராமலிங்கம்
- நாவலர் சோமசுந்தர பாரதியார்
- சுப்பிரமணிய பாரதியார்
- உ.வே.சா. தணிகைமணி
- மீனாட்சி சுந்தரனார்.

### படைப்புகள்

- தமிழ் மதம்
- போலி சைவரும்
- பண்டை தமிழரும் ஆரியமும்
- திருவெற்றியூர் மும்மணி கோவை
- முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை
- சோமசுந்தர நாயகர் வரலாறு
- பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை
- திருவாசக விரிவுரை
- மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்
- குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி
- பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்
- கோகிலாம்பாள் கடிதங்கள்
- அறிவுரை கொத்து
- சாகுந்தலா நாடகம்
- அறவுரைக் கோவை
- அம்பிகாபதி அமராவதி நாடகம்
- கருத்தோவியம்
- சிவஞான போத ஆராய்ச்சி



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- சிறுவர்களுக்கான செந்தமிழ்
- குமுதவல்லி
- சாகுந்தல நாடக ஆராய்ச்சி நூல்
- திருக்குறள் ஆராய்ச்சி
- சாதி வேற்றுமையும்

இவர் ஆங்கில மொழியிலும் சிறு நூல்களை எழுதி உள்ளார். அவை

| S.no | நூல் | வெளிவந்த ஆண்டு |
|---|---|---|
| 1. | Ancient and Modern Tamil Poets | 1937 |
| 2. | Saiva Siddhantha as a Philosophy of Practical knowledge | 1940 |
| 3. | Can Hindi be a lingua Franca of India | 1969 |
| 4. | Tamilan and Aryan form of Marriage | 1936 |

மறைமலை அடிகள் எழுதி வைத்திருந்த பல நூல்கள் 1950ல் அவர் மறைந்த பின்னர் வெளியிடப்பட்டன.

**சிறப்பு பெயர்கள்**

- தனித்தமிழ் மலை
- தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை
- தன்மான இயக்கத்தின் முன்னோடி

**புனைப்பெயர்**

- முருகவேள்

**பாராட்டுரை**

- மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர்
- தமிழ் நிலவு
- சைவ வான்
- தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது
- அவ்வுறக்கம் போக்கிய பெருமை அடிகளருக்கே சேரும் – **திரு.வி.கா**

**2. <u>பரிதிமாற் கலைஞர்</u>**

- ➢ 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழுக்குதொண்டு ஆற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் பரிதிமாற் கலைஞர்.
- ➢ சூரியநாராயண சாஸ்திரியார் என்ற பெயரை பரிதிமாற்கலைஞர் என மாற்றிக் கொண்டார்.
- ➢ மதுரை அடுத்த விளாச்சேரி என்ற ஊரில் 1870 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் ஆறாம் நாள் கோவிந்த சிவனார் லட்சுமி அம்மாள் இணையறுக்கு மகனாகப் பிறந்தார்.
- ➢ தந்தையிடம் வடமொழியும், மகாவித்துவான் சபாபதியாரிடம் தமிழும் பயின்றார்.
- ➢ சென்னை கிறிஸ்துவ கல்லூரியில் இளங்கலை பயின்றார். இளங்கலை தேர்வில் தமிழிலும் தத்துவத்திலும் பல்கலைக்கழகத்தில் முதல் மாணவராக தேர்ச்சி பெற்றார்.
- ➢ தான் பயின்ற கல்லூரியில் தத்துவத்துறை பேராசிரியர் பணி வழங்கப்பட்டதை ஏற்காது, தமிழ் துறை பணியை விரும்பிக் கேட்டு ஏற்றார்.
- ➢ பிறதுறை மாணவர்களும் அவருடைய வகுப்பிற்கு வந்து ஆர்வத்துடன் பாடம் கேட்டார்கள்.
- ➢ தமிழ் பயிலும் ஆர்வம் உடைய மாணவர்களுக்கு தம் இல்லத்திலேயே சுவைப்பட கற்பித்ததுடன் அவர்களை **இயற்றமிழ் மாணவன்** எனவும் அழைத்தார்.
- ➢ பாஸ்கர சேதுபதி தலைமையில் பாண்டித்துரை தேவர் மேற்பார்வையில்

www.tnpscgroup4.in

பரிதிமாற் கலைஞர் உ.வே.சா ராகவனார் இணைந்து நான்காம் தமிழ் சங்கத்தை உருவாக்கினார்.

- பரிதிமாற் கலைஞரின் தமிழ் புலமையையும், கவி பாடும் திறமையும் கண்டு யாழ்ப்பாணம் சீவை தாமோதனார் **திராவிட சாஸ்திரி** என்ற பட்டத்தை அவருக்கு வழங்கினார்.
- பரிதிமாற் கலைஞர் இயற்றிய தனிப்பாசுரத் தொகை என்ற நூலை ஜி.யூ போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
- பரிதிமா கலைஞர் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் படித்த போது கல்லூரி முதல்வராக இருந்த ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த **வில்லியம் மில்லர்** என்பார், டென்னிசன் இயற்றிய **ஆர்தரின் இறுதி** என்ற நூலில் உள்ள பாடலை நடத்தினார்.
- அதில் துடுப்புகளை அசைத்துச் செல்லும் படகானது அன்னப்பறவை போல் உள்ளது என உவமையாக்கப்பட்டு இருந்தது குறித்து வேறெந்த மொழியிலும் உவமை வந்ததில்லை என்றார் பரிதிமாற் கலைஞர்.
- 12-ஆம் நூற்றாண்டிலேயே கம்பராமாயணத்தில் குகப்படலத்தில் இத்தகைய உவமை கையாண்டிருப்பது குறித்து **விடுநனிது** என்ற பாடலை பாடி காட்டினார்.
- கல்லூரி முதல்வர் அது கேட்டு வியந்து பாராட்டினார்.தமிழில் வடமொழிச் சொற்கள் கலப்பதை கண்டித்தார். தமிழின் பெருமை உணராத ஊர் தமிழோடு வடமொழிக் கலப்பதை மணியும் பவளம் கலந்த மாலை என்றனர். பரிதிமாற் கலைஞரோ அது **மணியும் மிளகாய்** பழமும் கலந்த மாலை என்றார்.
- 1902 -ஆம் ஆண்டில் இருவரின் உறுதியான எதிர்ப்பால் பல்கலைக்கழகங்கள் தமிழை நீக்கி வடமொழிக் கொண்டு வருவது பற்றிய திட்டம் கைவிடப்பட்டது.
- இவர் ரூபாவதி, கலாவதி போன்ற நற்றமிழ் நாடகங்களை இயற்றியதோடு பெண் வேடம் புனைந்து நடிக்கவும் செய்தார்.
- **மாலவிஜயம்** என்ற இவரது நாடகம் கலவழி நாற்பது என்ற இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டது.
- சித்திரகவி என்ற நூலையும் குமரகுருவரின் நீதிநெறி விளக்கத்தின் 51 பாடலுக்கு உரையையும் எழுதினார்.
- மு.சி. பூரண லிங்கம் தொடங்கி வைத்த **ஞானப்போதினி** என்னும் இதழை நடத்தினார்.
- தமிழ், ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புழமைப் பெற்ற இவர் ஆங்கிலப் பாடல்கள் மற்றும் வடமொழி நூல்களை தமிழில் மொழி பெயர்த்தார்.
- மதுரை தமிழ் சங்கத்தாரின் செந்தமிழ் இதழில் உயர்தனி செம்மொழி எனும் தலைப்பில் கட்டுரை வரைந்தார்.
- தமிழ் மொழி உயர்தனி செம்மொழி என முதன்முதலாக நிலைநாட்டினார்.அயராது தமிழ் தொண்டாற்றிய அவர் தனது 33 ஆம் அகவையில் 2-11-1903 இயற்கையை எய்தினார்.
- நடுவுணரசு அரசு அவருக்கு அஞ்சல் தலை வெளியிட்டு சிறப்பு சேர்த்துள்ளது.

**3. <u>நாமு வேங்கடசாமி நாட்டார்</u>**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| **பெற்றோர்** | முத்துசாமி நாட்டார்தையலம்மாள் |
| **ஊர்** | நடு காவிரி தஞ்சை மாவட்டம் |
| **காலம்** | 02.04. 1884 முதல் 28. 03 .1944 வரை |

- பெற்றோர் இவருக்கு முதலில் சிவப்பிரகாசம் என்றே பெயரிட்டனர் பின்னர் வேண்டுதல் காரணமாக வேங்கடசாமி என மாற்றினர்.
- தன் தந்தையரிடம் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை மற்றும் அந்தாதி, கலம்பக வகை நூல்களை படித்தார்.
- பின்னர் ஆசிரியர் துணை இன்றி தானே தமிழ் இலக்கியங்களைப் பயின்று மதுரை தமிழ் சங்கத்தின் தேர்வுகளை எழுதி முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று வள்ளல் பாண்டித்துரை தேவர் அவர்கள் கையால் தங்கத்தோடாப் பரிசினை வென்றார்.
- திருச்சி எஸ்.பி.ஜி. கல்லூரியில் தமிழாசிரியராக பணியாற்றியுள்ளார்.
- கோயமுத்தூர் தூய மைக்கேல் பள்ளியில் தமிழ் ஆசிரியராக பணியாற்றியுள்ளார்.
- திருச்சி பிஷப்ஹீபர் கல்லூரியில் தலைமை தமிழ் பேராசிரியராக 24 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.
- அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழ் பேராசிரியராக ஏழாண்டுகள் பணியாற்றி ஒய்வு பெற்றார்.
- தமிழ்வேள் உமா மகேஸ்வரனின் விருப்பத்திற்கு இணங்க கரந்தை புலவர் கல்லூரியில் நான்காண்டுகள் ஊதியம் பெறாமல் மதிப்பியல் முதல்வராக பணிபுரிந்துள்ளார்.
- 1912-இல் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நாட்டாரின் இல்லத்திற்கு வந்து சிலப்பதிகாரத்திலும், தொல்காப்பியத்திலும் தனக்கு இருந்த ஐயங்களை கேட்டு விளங்கிக் கொண்டார்.

**படைப்புகள்**

- நக்கீரர் இந்நூல் (லண்டன் பல்கலைக்கழகம், காசி இந்து பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பட்ட படிப்பிற்கு பாடமாக வைக்கப்பட்டுள்ளது).
- கபிலர், கள்ளர் சரித்திரம், கண்ணகி வரலாறு, கற்பும் மாண்பும், சோழர் சரித்திரம், கட்டு திரட்டு, காந்தியடிகள் நெஞ்சு விடு தூது.

**உரைநூல்கள்**

- அகநானூறு
- இன்னா நாற்பது
- களவழி நாற்பது
- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- அதிவீரராம பாண்டியர் இயற்றிய வெற்றி வேற்கை எனும் நறுந்தொகை
- ஔவையார் எழுதிய கொன்றைவேந்தன், மூதுரை, ஆத்திச்சூடி
- உலகநாதன் இயற்றிய உலக நீதி துறைமங்கலம்
- சிவப்பிரகாசம் சுவாமிகள் இயற்றிய நன்னெறி திருவிளையாடற் புராணம்

- வேங்கடசாமி நாட்டார் அவர்களின் சொற்பொழிவாற்றல் கண்டு வியந்த சென்னை மாகாண தமிழ்ச் சங்கம் 24-12-1940 ஆண்டு இவருக்கு நாவலர் எனும் பட்டத்தை வழங்கியது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

## 4. ரா.பி.சேதுப்பிள்ளை

| | |
|---|---|
| **பெற்றோர்** | பிறவி பெருமாள் பிள்ளை<br>சொர்ணாம்பாள் |
| **ஊர்** | ராசவல்லிபுரம்<br>திருநெல்வேலி மாவட்டம் |
| **காலம்** | 2-3-1896 முதல்<br>25-4-1961 வரை |
| **பணி** | வழக்குரைஞர்<br>பேராசிரியர் |

- இவர் சிறந்த மேடைப் பேச்சாளர் அடுக்குமொழியிலும் செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை சுவையுடன் பேசுவதில் வல்லவர்.
- இவர் பெயரில் உள்ள **இரா** என்பது அவரது ஊரின் பெயரை குறிக்கிறது.
- ராசவல்லிபுரம் அருணாச்சல தேசிகரிடம் மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், தேவாரம், திருவாசகம் போன்ற நூல்களை கற்றார்.
- இவருடைய தமிழரசிரியர்களான சுப்பிரமணியம், சிவராமன் என்பவர்கள் இவரது தமிழ் தமிழர் ஆர்வத்தை வளர்த்தனர்.
- தான் படித்த பச்சையப்பன் கல்லூரியிலேயே விரிவுரையாளராக பணியாற்றி கொண்டே சட்டம் பயின்று தேர்ச்சி பெற்றார். பின்னர் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இவ்வுலகானந்தர் சோமசுந்தர பாரதியார் ஆகிய இரு பெரும் புலவர்களின் தலைமையில் ஆறாண்டுகள் பணிபுரிந்தார்.
- 1936-லிருந்து சென்னை பல்கலைக்கழகத்தில் 25 ஆண்டு காலம் தமிழ் துறை பேராசிரியராகப் பணியாற்றினார். அந்நாளில் பேராசிரியர் வையாபுரி பிள்ளை தொகுத்து வந்த தமிழ் **பேரகராதி பணி** நிறைவேற துணை நின்றார்.
- இவரின் முயற்சியால் திராவிட பொதுச்சொற்கள் திராவிட பொதுப் பழமொழிகள் ஆகிய இரு நூல்களை சென்னை பல்கலைக்கழகம் வெளியிட்டது. இவர் எழுதிய முதல் கட்டுரை நூல் திருவள்ளுவர் நூல் நயம் ஆகும். இவர் படைத்த உரைநடை நூல்களில் தலைசிறந்தது தமிழகம் ஊரும் பேரும் என்பதாகும்.

**படைப்புகள்**

- சிலப்பதிகாரம் நூல் நயம்
- வழிவழி வள்ளுவர்
- தமிழ் இன்பம்
- ஆற்றங்கரைனிலே
- தமிழ்நாட்டு நவமணிகள்
- தமிழ் கவிதை களஞ்சியம்
- தமிழர் வீரம்
- செஞ்சொற்கவிக் கோவை
- தமிழ் விருந்து
- பாரதியாரின் கவித்திறட்டு
- வேலும் வில்லும்
- கடற்கரையினிலே
- வேலின் வெற்றி
- கிறிஸ்தவ தமிழ்த் தொண்டர்
- சேது பிள்ளையின் தமிழ் இன்பம் என்ற நூல் 1955-ல் சாகித்திய அகாதமி விருது பெற்றது.

**பாராட்டு உரைகள்**

- **செந்தமிழுக்கு சேதுப்பிள்ளை** என்று இவரை பாராட்டிய கவியோகி சுந்தரானந்த பாரதி மேலும் உரைநடையில் தமிழன்பன் நுகர வேண்டுமானால் சேதுப்பிள்ளை செந்தமிழை படிக்க வேண்டும் என்பார்.
- சேது பிள்ளையின் பேச்சாற்றலை பாராட்டி தர்மபுரி ஆதீனம் 1950 ஆம் ஆண்டு சொல்லின் செல்வர் எனும் பட்டத்தை வழங்கியது.
- சேது பிள்ளையின் நடை ஆங்கில அறிஞர் **ஹட்சனின்** நடையை போன்றது என்று சோமேலே பாராட்டியுள்ளார்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**பேனா மன்னருக்கு மன்னன்.** அவர் சிறந்த பக்தன் அவர் சாகவில்லை ஏனெனில் பக்தர்களை கண்டு சாவுதான் செத்துப் போகிறது. அவர் வாழ்ந்து வந்த புதுப்பேட்டை விலாசம் தான் மாறி உள்ளது புது விலாசம் மக்கள் உள்ளம்

**– பி.ஸ்ரீ.ஆச்சார்யா**

## 5. திரு.வி.கல்யாண சுந்தரனார்

| | |
|---|---|
| **பெற்றோர்** | விருத்தாசலம் சின்னம்மையார் |
| **ஊர்** | துள்ளம் காஞ்சிபுரம் மாவட்டம் |
| **காலம்** | 6-8-1883 முதல் 17-9-1953 வரை |
| **சிறப்பு பெயர்** | தமிழ்தென்றல் திரைவேலர், |
| **ஆசிரியர்கள்** | மயிலை தனியாசலான முதலியார் |
| **பணிகள்** | ஸ்பென்சர் தொழிலகத்தில் கணக்கு (1906) சென்னையில் வெஸ்லியன் பள்ளியில் 1909 முதல் ஆறு ஆண்டுகள் ஆசிரியர் பணி. |
| **இலக்கியவாரிசுகள்** | கல்கி, டாக்டர்.மு.வரதராஜர் |

### தமிழ் பற்று

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதை முழுமூச்சாக கொண்டு வடமொழிச் சொற்கள் கலவாமல் பேசவும் எழுதவும் செய்தார். **பிராயணம்** என்ற சொல்லுக்கு பதிலாக செலவு என்ற சொல்லை பயன்படுத்தினார்.

### பிறமொழி அறிவு

ஆங்கில மொழியில் புலமைப்பெற்றவர் காந்தியடிகள். தமிழகம் வந்தபோதெல்லாம் அவரது மேடைப்பேச்சினை தமிழில் மொழி பெயர்த்தவர் இவரே. **'தமிழை வளர்க்க வேண்டும் என்றால் பிற மொழியை வெறுக்க வேண்டும் என்பது பொருளன்று'** என்று கூறினார்.

### இளைஞர்களுக்கு அறிவுரை

தமிழ்த்தாய் நேற்றோ, இன்றோ பிறந்தவள் அல்லல் அவள் மிகத் தொன்மையுடையவள். தாய்க்கொலை புரிவதா தமிழர் வீரம்? தமிழ் இறந்த பின் தமிழ் மண் மட்டும் இருந்தென்ன? மொழி இறந்தப்படின் நாடும் இறந்துபடுமன்றோ? தமிழ் உலகின் இழிந்த நிலையை ஓர்ந்து உங்கள் பொறுப்பை உணருங்கள். தமிழ்த்தாயை புது போர்வையில் ஒப்பனை செய்து அரியாசனத்தில் அமர்த்த சூல் கொண்டு எழுங்கள்!

### பேச்சுப்பணி

கேட்டார் பிணிக்கும் தகையவய் கேளாறும் திரும்பும் வண்ணம் பேசுவதில் வல்லவர் திரு வி கா நடை என்றே ஒரு தனி நடையை நடைமுறைப்படுத்தும் அளவுக்கு பெரும் வெற்றி கண்டவர்.

### எழுத்துப் பணி

உரைநடை எழுதுவது எனது தொழில் என்று கூறினார். இவரை மொழி நடை மாலை என தே. போ. மீனாட்சி சுந்தரனார் பாராட்டி உள்ளார்.

### அரசியல் பணி

சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட இவர் இந்தியாவிலேயே முதன் முதலாக தொழிற்சங்கத்தை தோற்றுவித்து தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார்.



www.tnpscgroup4.in

**பத்திரிக்கை பணி**

தேசபக்தன் என்ற பத்திரிகையில் இரண்டரை ஆண்டுகள் பணிபுரிந்தார். அதன் பின்னர் திராவிடன், நவசக்தி போன்ற பத்திரிகைகளில் ஆசிரியராக இருந்து நாட்டு விடுதலைக்கு தொண்டாற்றியுள்ளார்.

**படைப்புகள்**

**உரைநடை நூல்கள்**

- யாழ்ப்பாணம் தந்த சிவஞான தீபம் (நா கதிரை வேற்பிள்ளை சரித்திரம்)
- மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்
- பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை
- நாயன்மார் வரலாறு
- முடியா ? காதலா ? சீர்திருத்தமா ?
- உள்ளொளி
- பெரியபுராணம் குறிப்புரையும் வசனமும்
- பட்டினத்து பிள்ளையார் திருப்பாடற்றிரட்டும் பத்திரகிரியார் புலம்பலும் விருத்தியுரையும்
- காரைக்காலம்மையார் திருமுறை குறிப்புரை
- திருக்குறள் விரிவுரை
- தேசபக்தாமிர்தம்
- என் கடன் பணி செய்து கிடப்பதே
- தமிழ்நாட்டுச் செல்வம்
- தமிழ் தென்றல் அல்லது தலைமை பொலிவு
- சீர்திருத்தல் அல்லது இளமை விருந்து
- தமிழ்ச்சோலை (கட்டுரை திரட்டு)
- இந்தியாவும் விடுதலையும்
- தமிழ்க்கலை
- சைவ சமய சாரம்
- நாயன்மார்திறம்
- தமிழ்நாடும் நம்மாழ்வரும்
- சைவத்தின் சமரசம்
- முருகன் அல்லது அழகு
- கடவுக்காட்சியும் தாயுமானவரும்
- இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்
- தமிழ் நூல்களில் பௌத்தம்
- சைவத்திறவு
- நினைப்பவர் மனம்
- இமயமலை அல்லது தியானம்
- சமரச சன்மார்க்க போதமும் திறமும்
- சமரச தீபம்
- சித்த மார்க்கம்
- பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி

**செய்யுள் நூல்கள்**

- முருகன் அருள் வேட்டல்
- திருமால் அருள் வேட்டல்
- புதுமை வேட்டல்
- கிறிஸ்துவின் அருள் வேட்டல்
- புதுமை வேட்டல்
- சிவன் அருள் வேட்டல்
- கிறிஸ்து மொழி குறள்
- இருளில் ஒளி
- இருமையும் ஒருமையும்
- அருகன் அருகே அல்லது விடுதலை வலி
- பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தியமும்
- சித்தத்திருத்தல் அல்லது செத்துப் பிறத்தல்
- முதுமை உளறல்
- வளர்ச்சியின் வாழ்வும் அல்லது படுக்கை பிதற்றல்
- இன்ப வாழ்வு

**பயண நூல்** : இலங்கைச் செலவு

**இறுதி நூல் :**

- தமது எழுபதாவது வயதில் உடல் தளர்ந்து படுக்கையில் இருந்தபோதும் வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கை பிதற்றல் என்ற நூலை மூவா உதவியுடன் வெளியிட்டார்.
- தேசப்பிதா காந்திஜியை முதன்முதல் காந்தியடிகள் என்று குறிப்பிட்டவர் திரு.வி. கல்யாண சுந்தரனார்



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- சிலப்பதிகாரத்தில் வரும் **கௌந்தியடிகள்** என படிக்கும் போது காந்தியடிகள் என குறிப்பிட வேண்டும் என தோன்றியதாக தமது நவசக்தி இதழில் எழுதியுள்ளார்.
- அன்னிபெசன்ட் அவர்களை அன்னை வசந்தை என்று தெரிவிக்க குறிப்பிட்டார். வல்லரசு என்ற சொல்லை முதன் முதலில் உருவாக்கியவர் திரு. வி.க.
- சட்டசபையில் ஆங்கிலமே பேசப்பட்டு வந்த நிலையில் சேலத்தை சேர்ந்த பிவி நரசிம்மன் என்பவர் முதன் முதலில் தமிழில் பேசியதை எந்த இதழும் வெளிராத போது தெரிவிக்க தமது தேசபக்தன் இதழில் அச்செய்தியை வெளியிட்டார்

**புதுமை வேட்டல்**

பண்ணினை இயற்கை வைத்த
பண்பனே போற்றி போற்றி
பெண்மையில் தாய்மை வைத்த
பெரியண்ணே போற்றி போற்றி
வன்மையே உயிரில் வைத்த
வள்ளலே போற்றி போற்றி
உண்மையில் இருக்கை வைத்த
உறவனே போற்றி போற்றி

**– திரு.வி.க**

**பொருள்**

இசையை இயற்கையோடு இணைத்த பண்பாளனே, பெண்களுக்கு தாய்மையால் பெருமை சேர்த்த பெருமைக்குரியவனே, கொடைத்தன்மையை உயிரினங்களுக்கு தந்த வள்ளல் தன்மை உடையவனே, உள்ளத்தில் உண்மையை வைத்த உறவு உடையான் உன்னை வாழ்த்துகிறேன்!

**தமிழ் வாழ்வினர்**

- மனம் முடித்த ஆறு ஆண்டுகளில் அவர் தம் மனைவியை இழந்த போது, அவர் நண்பர் மனைவியை இழந்து தனிமையில் வாழ்வது கடினமாக இல்லையா என கேட்டார். அதற்கு திரு.வி.க நான் தனியாக வாழவில்லை தமிழோடு வாழ்கிறேன் என கூறினார்.
- திரு.வி.க அவரிடம் ஒருமுறை பூக்களில் சிறந்த பூ எதுவென கேட்டேன், அதற்கு அவர் சற்றும் தயங்காமல் **பருத்திப்பூ** என கூறினார். ஏனெனில் மற்றவை எல்லாம் காய்த்து கனியாகிவிடும் ஆனால் பருத்தி மட்டுமே பூத்து காய்த்து வெடித்து பஞ்சாகி நூலாகி ஆடையாகி நம் மானம் காத்து நிற்கும் என்றார்.

**6. சா.வையாபுரி பிள்ளை**

| | |
|---|---|
| **பெற்றோர்** | சரவணப் பெருமாள்<br>பாப்பம்மாள் |
| **ஊர்** | சிக்கநரசய்யன் பேட்டை<br>திருநெல்வேலி மாவட்டம் |
| **காலம்** | 12 -10-1891 முதல்<br>17-2-1956 வரை |

- சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் படித்து மாகாணத்திலேயே முதல் மதிப்பெண் பெற்று சேதுபதி தங்கப்பதக்கத்தை பெற்றவர்.
- திருவனந்தபுரம் சட்டக் கல்லூரியில் படித்து வழக்குரைஞராக பணிபுரிந்தார்.
- அவருடைய நெருங்கிய நண்பர்களான இரசிகமணி, டி.கே.சி.நீலகண்ட சாஸ்திரியார், பேராசிரியர் சாரநாதன் பே. அப்புசாமி போன்றோர் இருந்துள்ளனர்
- உ.வே சாமிநாதய்யருக்கு பின் பழந்தமிழ் இலக்கியங்களை ஆய்வு செய்து தொகுத்து வெளியிட்ட பெருமை உரியவர்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- 1926-ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழகம் உருவாக்கி வந்த தமிழ் அகராதியின் பதிப்பாசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.
- திருவிதாங்கூர் பல்கலைக்கழக தமிழகத்துறை தலைவராகவும் சிறிது காலம் பணியாற்றியுள்ளார். அப்பொழுதுதான் மலையாள மொழி லெக்சிகன் பதிக்கப்பட்டது.
- தஞ்சை பல்கலைக்கழகத்தில் முதல் துணைவேந்தராக விளங்கிய வ.ஐ சுப்பிரமணியம் இவரின் மாணவராணார்.
- இரசிகமணி டி.கே.சியுடன் இணைந்து திருநெல்வேலியில் கம்பன் கழகத்தை உருவாக்கினார்.
- மகாகவி சுப்பிரமணிய பாரதி வ.உ சிதம்பரம்பிள்ளை ஆகிய இருவரிடம் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார்
- வ.உ.சி அவர்கள் இளம்பூரணரின் தொல்காப்பிய உரையை பதிப்பிக்கும் நோக்கத்தோடு படியெடுத்தபோது அவருக்கு பேருதவியாக இருந்தது.
- தன் வீட்டில் இருந்த 2943 புத்தகங்களையும் கொல்கத்தா தேசிய நிலத்திற்கு நன்கொடையாக அளித்துவிட்டார்.
- கம்பராமாயணத்துக்கு உரை எழுத வேண்டும் என்று அவருடைய ஆசை நிறைவேறாமலேயே போய் விட்டது.

**இயற்றிய நூல்கள்**

- ✓ ஆராய்ச்சி உரைத் தொகுப்பு
- ✓ சிறுகதை மஞ்சரி
- ✓ இலக்கிய சிந்தனைகள்
- ✓ தமிழர் பண்பாடு
- ✓ கம்பன் ஆராய்ச்சி பதிப்பு
- ✓ உரை மணிமாலை
- ✓ இலக்கிய தீபம்
- ✓ இலக்கிய உதயம்
- ✓ இலக்கிய மணிமாலை
- ✓ கம்பன் காவியம்
- ✓ இலக்கணச் சிந்தனைகள்
- ✓ திராவிட மொழிகளில் ஆராய்ச்சி
- ✓ சொற்கலை விருந்து
- ✓ காவியக்காலம்
- ✓ இலக்கிய விளக்கம்
- ✓ தமிழ் சுடர்மணிகள்
- ✓ அகராதி நினைவுகள்
- ✓ தமிழின் மறுமலர்ச்சி.

**பதிப்பித்த நூல்கள்**

1. மனோன்மணியம்
2. துகில்விடு தூது
3. நாம தீபக் நிகண்டு
4. அரும்பொருள் விளக்க நிகண்டு
5. களவியற் காரிகை
6. கம்பராமாயணம்
7. குருகூற்பள்ளு
8. திருக்குருங்குடி
9. அழகிய நம்பி
10. தினகர வெண்பா
11. நெல் விடுதூது
12. தொல்காப்பியம்
13. திருமந்திரம்
15. பூகோள விலாசம்
16. திருப்பணி மாலைகள்
17. ராஜராஜ தேவர் உலா
18. பொதிகை நிகண்டு
19. மதுரை கோவை
20. புறத்திரட்டு
21. சீவக சிந்தாமணி
22. எட்டுத் தொகை
23. பத்துப்பாட்டு
24. பதினெண் கீழ்க்கணக்
25. நவநீதி பாட்டியல்
26. கொண்டல் விடு தூது
27. முதலாயிரம்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

14. திருமுருகாற்றுப்படை

28. திருவாய் மொழி.

## 7. டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | வேங்கடரத்தினம் |
| **பிறந்த ஊர்** | திருவாரூர் மாவட்டம் உத்தமநாதபுரம் |
| **காலம்** | 19-2-1855 முதல் 28-4-1942 வரை |
| **அவருடைய ஆசிரியர் பெயர்** | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| **ஆசிரியர் அவருக்கு வைத்த பெயர்** | சாமிநாதன் |

### சிறப்பு பெயர்கள்

- ✓ தமிழ் தாத்தா (கல்கி)
- ✓ மகாமகோபாத்தியா (சென்னை ஆங்கில அரசு)
- ✓ டாக்டர் (சென்னை பல்கலைக்கழகம்)
- ✓ குடந்தை நகர் கலைஞர் (பாரதியார்)
- ✓ பதிப்பு துறையின் வேந்தர்.
- ✓ படைப்புகள்
- ✓ மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம்
- ✓ சங்கத்தமிழும் பிற்கால தமிழும்
- ✓ புதியதும் பழையதும்
- ✓ கண்டதும் கேட்டதும்
- ✓ நினைவு மஞ்சரி
- ✓ தமிழ்ப்பா மஞ்சரி
- ✓ என் சரிதம்(வாழ்க்கை வரலாறு)
- ✓ திருக்குறளும் திருவள்ளுவரும்
- ✓ புத்தர் சரித்திரம்
- ✓ நல்லுரை கோவை

### பிற செய்திகள்

- ✓ இவர் இளம் வயதில் சடகோப அய்யங்காரிடம் தமிழ் கற்றார்.
- ✓ முதன் முதலில் இவர் பதிப்பித்த காப்பியம் சீவக சிந்தாமணி.
- ✓ தமிழில் முதன் முதலில் டாக்டர் பட்டம் பெற்றவர் இவரே.
- ✓ உத்தமதானபுரம் வேங்கட சுப்புவின் மகனார் சாமிநாதன் என்பவன் சுருக்கமே உ.வே.சா ஆகும்.
- ✓ இவர் ஊர் ஊராகச் சென்று செல்லுக்கும் கரையானுக்கும் இரையாகிக் கொண்டிருந்த ஓலைச்சுவடிகள் எல்லாம் திரட்டி கொண்டு வந்து தமிழ் நூல்களை அச்சிட்டு புதுப்பித்தார்.

### உ.வே.சா பதிப்பித்த நூல்கள்

- ✓ எட்டுத்தொகை–8
- ✓ பத்துப்பாட்டு–10
- ✓ சீவக சிந்தாமணி
- ✓ சிலப்பதிகாரம்
- ✓ மணிமேகலை
- ✓ புராணங்கள்-12
- ✓ உலா-9
- ✓ கோவை-6
- ✓ தூது-6
- ✓ வெண்பா நூல்கள்– 13
- ✓ அந்தாதி -3
- ✓ பரணி -2
- ✓ மும்மணி கோவை -2
- ✓ இரட்டை மணிமாலை -2
- ✓ பிற பிரபந்தங்கள்-4

- ❖ 1942-இல் உ.வே.சா அவர்களின் பெயரால் நிறுவப்பட்ட டாக்டர் நூல் நிலையம் சென்னையில் உள்ள பெசன்ட் நகரில் செயல்பட்டு வருகிறது.
- ❖ உ.வே.சா அவர்களின் தமிழ் பணிகளை பாராட்டிய அயல் நாட்டவர்கள் ஜி.யு.போப் சூழியல் வின்சோன்.
- ❖ 2006-இல் நடுவன அரசு உ.வே.சா அவர்களின் தமிழ் தொண்டினை



www.tnpscgroup4.in

பெருமைப்படுத்தி அஞ்சல் தலையை வெளியிட்டு சிறப்பித்துள்ளது.

- ❖ உத்தமாதானபுரத்தில் உ.வே.சா நினைவு இல்லம் அமைக்கப்பட்டுள்ளது.
- ❖ குறிஞ்சிப்பாட்டு என்ற நூலில் உள்ள 99 வகையான பூக்கள் உ.வ.ச அவர்களுக்கு 96 பூக்களின் பெயர் மட்டுமே கிடைத்தது மீதியுள்ள மூன்று பூக்களின் பெயர்களுக்காக பல மாதங்கள் ஓயாது அலைந்து திரிந்து கண்டறிந்த பின்னரே அதன் பதிப்புப் பணியை மேற்கொண்டார்.

**ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்படும் இடங்கள்**

- ❖ கீழ் திசை சுவடிகள் நூலகம் சென்னை
- ❖ அரசு ஆவண காப்பகம் சென்னை.
- ❖ உலக தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.
- ❖ சரஸ்வதி நூலகம் தஞ்சாவூர்.

**8. தெ.போ.மீனாட்சி சுந்தரனார்**

| | |
|---|---|
| **தந்தை** | பொன்னுச்சாமி கிராமணியர் |
| **ஊர்** | சென்னை |
| **காலம்** | 08.01.1901 முதல் 27.08.1980 வரை |
| **பணி** | தமிழ் பேராசிரியர், எழுத்தாளர் |
| **விருதுகள்** | கலைமாமணி பத்மபூஷன் |

**அறிந்த மொழிகள்**

| | |
|---|---|
| தமிழ் | சமஸ்கிருதம் |
| மலையாளம் | ஹிந்தி |
| தெலுங்கு | பிரெஞ்ச் |
| கன்னடம் | ஜெர்மன். |

- ✓ இவருடைய தந்தைக்கு தமிழ் மீதும் தமிழர்கள் மீதும் இருந்த பற்றினால் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் பெயரை மகனுக்கு சூட்டினார்.
- ✓ தமிழிலும், ஆங்கிலத்திலும் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமையல், ஒப்பிலக்கியம், மொழியியல் குறித்த பல கட்டுரைகளையும் திறனாய்வுகளையும் எழுதி உள்ளார்.
- ✓ மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தராக பணியாற்றியுள்ளார். (1966 முதல் 1971 வரை)
- ✓ 1924-இல் சென்னை மாநகராட்சியின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ✓ 1925-இல் அலுமினிய தொழிலாளர் சங்கத் தலைவராய் இருந்து தொண்டு புரிந்தார்.
- ✓ 1941-இல் நாட்டு உரிமைக்காக மறியல் செய்து சிறை சென்றார்.
- ✓ 1944 முதல் 1946 வரை அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றினார்.
- ✓ 1961-இல் சிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழ் பேராசிரியராக பணிபுரிந்தார்.
- ✓ 1973-74 ஆண்டுகளில் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் மொழியியல் கழகச் சிறப்பாக சிறப்பு ஆய்வாளராக பொறுப்பேற்றார்.
- ✓ அரிஜனங்களுக்காக இரவு பள்ளி தொடங்கினார்.
- ✓ தர்மபுரி ஆதீனம் இவருக்கு பல்கலை செல்வர் என்றும் குன்றக்குடி ஆதீனம் பன்மொழி புலவர் என்றும் விருதுகள் அளித்து சிறப்பித்தன. நடமாடும் பல்கலைக்கழகம் என்று திரு.வி.க பாராட்டி உள்ளார்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

⇒ குடிமக்கள் காப்பியம், சமண இலக்கிய வரலாறு போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

⇒ கால்டுவெல்லுக்கு அடுத்தபடியாக திராவிட மொழிகள் ஒப்பியல் ஆய்வினை வளர்த்தார்.சிலப்பதிகாரத்திற்கு இவரைப் போன்று எவரும் திறனாய்வு எழுதியதில்லை.

### 9. சி.இலக்குவனார்

| | |
|---|---|
| **பெற்றோர்** | சிங்காரவேலர்-இரத்தினத்தாச்சி |
| **ஊர்** | மதுரை அடுத்த திருநகர் |
| **காலம்** | 17.11.1909 முதல் 03.09.1973 வரை |
| **பணி** | பேராசிரியர் |

⇒ இவர்தம் தமிழாசிரியரான, சாமி சிதம்பரனார் இவருடைய இயற்பெயரான லட்சுமணன் என்பதை இலக்குவன் என மாற்றினார்.

⇒ இலக்கியம், திராவிட கூட்டரசு, குரல் நெறி என பல்வேறு இதழ்களை நடத்தினார்.

⇒ 1965–ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் போது இரு முறை கைது செய்யப்பட்டு சிறை சென்றார், அதனால் பணி நீக்கமும் செய்யப்பட்டார்.

⇒ சிறையில் இருந்த போது என் வாழ்க்கை போர் என்ற நூலினை எழுதினார்.

**இயற்றிய செய்யுள் நூல்கள்**

- எழிலரசி அல்லது காதலின் வெற்றி
- மாணவர் ஆற்றுப்படை
- துரத்தப்பட்டேன்
- தமிழிசை பாடல்கள்
- அண்ணாவிற்கு பாவியல் வாழ்த்து

**ஆராய்ச்சி நூல்கள்**

- என் வாழ்க்கை போர்
- அமைச்சர் யார் ?
- அம்முவனார்
- எல்லோரும் இந்நாட்டு மன்னர்
- வள்ளுவர் வகுத்த அரசியல்
- வள்ளுவர் கண்ட இல்லறம்
- இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்
- தமிழ் கற்பிக்கும் முறை
- தொல்காப்பிய ஆராய்ச்சி

**விளக்க உரை**

- திருக்குறள் ஒழிப்புரை
- தொல்காப்பிய விளக்கம்
- மாமுலனார்
- காதற்காட்சிகள்

**வரலாறு**

- கர்மவீரர் காமராசர்

**சி.இலக்குவனாரின் மாணவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள்**

- மு.கருணாநிதி
- முனைவர் கி.வேங்கடசுப்பிரமணியன்
- நல்லக்கண்ணு
- முனைவர் கா.காளிமுத்து
- நா.காமராசன்
- பா.செயபிரகாசம்
- இன்குலாப்
- முனைவர்.பூ
- சொல்விளங்கும் பெருமாள்

**பட்டங்கள்**

- செந்தமிழ் மாமனி

www.tnpscgroup4.in

- பயிற்சி மொழி காவலர்
- தமிழர் தளபதி
- இலக்கணச் செம்மல்
- தமிழ் அரிமா
- இரண்டாம் நக்கீரர்
- தன்மான தமிழ் மறவர்
- 20-ஆம் நூற்றாண்டு தொல்காப்பியர்

மொரிஷியஸ் தீவில் இலகுவாணரின் பெயரில் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

## 10. தேவநேயப் பாவாணர்

| | |
|---|---|
| **பெற்றோர்** | ஞானமுத்து பரிபூரணம் |
| **காலம்** | 7-2-1902 முதல் 15-1-1981 வரை |
| **ஊர்** | சங்கரன்கோவில் |
| **கல்வி** | பண்டிதர், புலவர், வித்துவான், முதுகலை தமிழ், பி.ஓ.எல் |
| **சிறப்பு** | செந்தமிழ் செல்வர், செந்தமிழ் ஞாயிறு, தமிழ் பெருங்காவலர், மொழிஞாயிறு, இலக்கிய பெட்டகம், இலக்கணச் செம்மல் உட்பட 174 சிறப்பு பட்டங்களை பாவாணர் பெற்றுள்ளார். |

**உலக முதன்மை தமிழ்**

⇒ இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும் தமிழ் திராவிட மொழிகளுக்கு தாய்மொழி தமிழ் என தன் வாழ்நாள் முழுவதும் ஆய்வு செய்து நிறுவிய செம்மல் தேவனாய பாவாணர்.

⇒ உலகின் முதல் மாந்தன் தமிழன். தமிழன் தோன்றிய இடம் குமரிக்கண்டமே என்பதும் மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம், பழந்தமிழர் நாகரிகமே என்பதும் பாவனாரது ஆய்வு புலத்தின் இரு கண்களாகும்.

⇒ தமிழை வடமொழி வல்லமை என்றும் மீட்பதற்காக இறைவன் என்னை படைத்தான் என்பது அவரின் கூற்று.

⇒ கோயில்களில் தமிழில் வழிபாடு நடைபெற வேண்டும் என்றும் பிறப்பு இறப்பு தொடர்பான சடங்குகள் யாவும் தமிழில் நடைபெற வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

⇒ 43 நூல்களையும் 20–க்கும் மேற்பட்ட ஆய்வு கட்டுரைகளை எழுதினார். மாந்தன் தோற்றமும் தமிழர் மரபு என்ற தலைப்பில் 1981–இல் உலகத் தமிழ் மாநாட்டில் சொற்பொழிவாற்றினார்.

**பாவாணரின் படைப்புகள்**

⇒ ஒருமுறை மிதிவண்டிக்காரர் தம் செய்கைக்காக, பாவணாரிடம் மன்னிப்பு கேட்டபோது பாவணர் மன்னிப்பு என்பது உருதுச் சொல் ‘பொறுத்துக் கொள்க’ என்பதே சரியான தமிழ்ச்சொல் என்று கூறினார்.

⇒ சொற்றொகுப்பு வேலைநிமித்தம் நீலமலையிலிருந்த கிருட்டினையா என்பவர் பாவனருக்கு உதவி செய்ததால் பதிலுக்கு அவர் வீட்டின் முன் கிடந்த விறகு கட்டைகளை கோடாரியால் பிளந்து வைத்தார். வெளியே சென்று இருந்த கிருட்டினையா வீட்டிற்கு வந்ததும் பாவாணர் செயல் குறித்து மனம் துடித்து போனார்.

⇒ தாம் பணியாற்றிய கல்வி நிறுவனத்தில் இவருக்கு மன வேறுபாடு ஏற்பட்டதும் எனக்கு வறுமையும் உண்டு, மனைவி மக்களும் உண்டு, அவற்றோடு மானமும் உண்டு என மன உறுதியுடன் கூறி வெளியேறினார்.

⇒ வறுமையில் வாழ்ந்தாலும் கையில் பணம் கிடைத்தால் அதற்கு நூல்கள் வாங்கி விடுவார், புலமை செறுக்கில்லாமல் எளிமையாக வாழ்ந்தார்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

⇒ அன்பு கசியும் நெஞ்சத்தில் ஆழமான நன்றி உணர்வு மிக்கவர்.

⇒ தனக்கு அடிபட்டு காயம் ஏற்பட்டபோதும் அதற்காக வருந்தாமல் மிதிவண்டிக்காரருக்கு தமிழ் கற்றுக் கொடுத்தவர்.

⇒ சென்னை அண்ணா சாலையில் பாவனார் பெயரில் மாவட்ட மைய நூலகம் செயல்பட்டு வருகிறது.

⇒ பாவாணர் படித்து பணியாற்றிய இராசபாளையத்திற்கு அருகில் உள்ள புறம்பு என்னும் இடத்தில் பாவனர் கோட்டம் அவர் தன் முழு உருவச்சிலை அவர் பெயரில் நூலகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

## 11. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்

| | |
|---|---|
| **பெற்றோர்** | சிதம்பரம் அண்ணாத்தாட்சியர் |
| **ஊர்** | எண்ணெய்க் கிராமம்<br>திருச்சி மாவட்டம் |
| **காலம்** | 6-04-1815 முதல்<br>2.-01-1876 வரை |

⇒ மீனாட்சி சுந்தரனார் இளமையில் தனது தந்தையாரிடம் தமிழ் கற்றார். சிறுவயதிலேயே செய்யுள் இயற்றும் ஆற்றல் கைவரப் பெற்றார்.

⇒ இவர் திரிசிபுரத்தில் (திருச்சிராப்பள்ளி) வாழ்ந்ததால் அவரை திரிசராபுரம் மீனாட்சி சுந்தரனார் என்று அழைத்தனர்.

⇒ சாதி சமயம் பாராது அனைவருக்கும் கல்வி கற்பித்தார். அவரிடம் பயின்ற மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் குலம்காதர் நாவலர், சவரிராயலு, தியாகராசர், உ.வே.சாமிநாத ஐயர்

⇒ திருவாடுதுறையில் ஆதின வித்துவானாக சில காலம் பணிபுரிந்தார். அங்கு தான் உ.வே.சா சாமிநாத ஐயருக்கு ஆசிரியராக இருந்தார்.

⇒ இவர் 80–க்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை வள்ளுவர் கண்ட நாடும் காமமும், சமணத்தமிழ் இலக்கியம், குடிமக்கள் காப்பியம், குலசேகரர்.

⇒ தமிழகத்தில் உள்ள பல்வேறு கோயில்களுக்கு நடைபயணம் மேற்கொண்டு கோயில்களை பற்றி தல புராணங்கள் பலவற்றை இயற்றியுள்ளார்.

⇒ இவருக்கு மகாவித்துவான் என்ற பட்டத்தை அழித்து சிறப்பித்தவர் திருவாவடுதுறை ஆதின தலைவர் அம்பலவான தேசிகர் ஆவார் மாயூரம் வேதநாயகப் பிள்ளையுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார் அவர் மீது வைத்திருந்த பெருமதிப்பின் காரணமாக அவரை பாராட்டி குலத்து கோவை எனும் நூலை இயற்றினார்.

⇒ சென்னையில் இவருக்கு தமிழ் கற்பித்த ஆசிரியர்கள் சபாபதி முதலியார் அம்பலவான தேசிகர் ஆவார்.

⇒ 19ஆம் நூற்றாண்டில் தமிழில் அதிக நூல்களை இயற்றியவர் இவர்தான் புராணங்கள் காப்பியங்கள் பிள்ளைத்தமிழ் நூல்கள் அந்தாதி கலம்பகங்கள் கோவைகள் எண்ணற்ற தனி புராணங்களை இயற்றியுள்ளார்.

⇒ பிள்ளைத்தமிழ் நூல்களை பாடியதால் பிள்ளைத்தமிழ் மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்று புகழப்பட்டார்.

⇒ பெரியபுராணம் பிரசங்கம் செய்வதில் வல்லவராக இருந்தார். நோய்க்கு மருந்து இலக்கியம் என்பது இவர் கூற்று.

⇒ தாயை விட என் மீது அதிக அன்பு கொண்டிருந்தவர் என் ஆசான் என்று உ.வே.சா இவரை குறிப்பிட்டுள்ளார்.

⇒ இவரது 42 படைப்புகளை சீ.மீனாட்சிசுந்தரம் பிள்ளை பிரபந்தத்திரட்டு என்னும் பெயரால் இரு தொகுதிகளாக உ.வே.சா வெளியிட்டுள்ளார்.

www.tnpscgroup4.in

⇒ திரிசிபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரபிள்ளை அவர்கள் சரித்திரம் என்ற பெயரில் இவரது வாழ்க்கை வரலாற்றை உ.வே.சா எழுதி வெளியிட்டுள்ளார்.

**மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்**

⇒ மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் திருச்சிராப்பள்ளி அருகிலுள்ள அதவத்தூர் என்னும் ஊரில் பிறந்தவர்.

⇒ தமிழ் இலக்கிய வரலாற்றில் கம்பருக்கு பின்னர் ஓராயிரம் ஆண்டு ஒயிந்து கிடந்த பின் வாராது வந்துதித்த புலமை கதிரவன் என்று தமிழர்கள் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனாரை போற்றினர்.

⇒ மீனாட்சி சுந்தரனார் திருவாவடுதுறை மடத்தின் தலைவர் சுப்பிரமணிய தேசிகர், சென்னை தாண்டவராயர் திருத்தணிகை விசாகப் பெருமாள் ஆகியோரிடம் பூக்கள் தோறும் சென்று தேன் உண்ணும் வண்டு போல் பாடம் கற்றார்.

**எழுதிய நூல்களில் சில**

- ✓ திருவாரூர் தியாகராஜ லீலை
- ✓ திருவானைக்காத் திருவந்தாதி
- ✓ திரிசிராமலை யமகவந்தாதி
- ✓ தில்லையமக அந்தாதி
- ✓ துறைசையமாக அந்தாதி
- ✓ திருவேகரத்து யமக அந்தாதி
- ✓ திருக்குடந்தை திருப்பந்தாதி
- ✓ சீர்காழிக்கோவை
- ✓ குளத்துக்கோவை
- ✓ வியாசக்கோவை
- ✓ அகிலாண்ட நாயகி மாலை
- ✓ பூவாளூர் பதிற்றுப்பத்தந்தாதி
- ✓ காந்தியம்மை பிள்ளைத்தமிழ்
- ✓ பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ்
- ✓ திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ்
- ✓ ஸ்ரீ அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ்
- ✓ வாட் போக்கி கலம்பகம்
- ✓ திருவாவடுதுறை ஆதினத்து குறும்பரையகவல்
- ✓ ஸ்ரீ அம்பலவாண தேசிகர் கலம்பகம்
- ✓ சுப்பிரமணிய தேசிகர்
- ✓ நெஞ்சுவிடு தூது
- ✓ பூவாளூர் பதிற்றுப்பத்தந்தாதி
- ✓ சிதம்பரேசர் மாலை
- ✓ சேக்கிழார் பிள்ளைத்தமிழ்
- ✓ திருநாகைக்காரோண புராணம்
- ✓ குசேலா பாக்கியானம்
- ✓ காந்தியம்மை பிள்ளைத்தமிழ்
- ✓ பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ்
- ✓ திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ்

## 12. அயோத்திதாச பண்டிதர்

⇒ சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள மக்கிமா நகரில் 1845 ஆம் ஆண்டு மே 26ம் நாள் பிறந்தார்

⇒ இவர் தந்தையார் கந்தசாமி ஆவார் பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் காத்தவராயன் இவரின் குருவின் பெயர் வி. அயோத்திதாச பண்டிதர்.

⇒ குருவின் மீது கொண்ட பற்றின் காரணமாக தம் பெயரை அயோத்திதாச பண்டிதர் என மாற்றிக் கொண்டார்.

⇒ சாதி சமயங்களை வெறுத்தார். இவர் நீலகிரி பல்மலை பகுதியில் வாழும் தோடர் இனத்தைச் சேர்ந்த பெண்ணை மனம் செய்து கொண்டார்.

⇒ பத்து ஆண்டுகள் ரங்கூனில் இவர் வாழ்ந்தபோது தேயிலைப் பறிப்போர், விவசாயக் கூலி வேலை செய்வோர், மரம் அறுப்போர் ஆகியோரின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டார்.

⇒ புத்த நெறியாள் கவரப்பட்ட இவர் புத்த மத கருத்துக்களை பரப்பினார். சித்த மருத்துவத்தில் புகழ்பெற்று விளங்கினார்.

⇒ தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்காக பாடுபட்டார். பிரம்ம ஞான ஆள்காட் என்ற இயக்கத்தின் தொடர்பால் சென்னையில் முக்கியமான ஐந்து இடங்களில் ஆள்காட் பஞ்சமர் பள்ளிகள் என தலித்துகளுக்கு இலவச பள்ளிகளை நிறுவினார்.

⇒ எள்ச்செடியின் விதையிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்ட நாளே தீபாவளி திருநாள்

என்றார். ஜப்பான் நாட்டில் நுகர்வோர் கண்டுபிடிப்பு திருநாளா'கத்தான் தீபாவளி கொண்டாடப்படுகிறது என்று ஆதாரத்துடன் கூறினார்.

⇒ இவர் தமிழ், பாலி, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார்.

⇒ 1907–ஆம் ஆண்டு சென்னையில் 'ஒரு பைசா தமிழன்' என்னும் வார இதழை காலணா விலையில் தொடங்கினார்.

⇒ ஒரு ஆண்டிற்கு பின் அவ்விதையின் பெயரை தமிழன் என மாற்றினார். உயர்நிலையையும் இடைநிலையையும் கடை நிலையையும் பாகுபடுத்தி அறிய முடியாத மக்களுக்கு நீதி நேர்மை சரியான பாதை ஆகியவற்றை தெளிவுபடுத்துவதே இவ்விதலின் நோக்கம் எனக் குறிப்பிட்டார்

⇒ இவர் தமிழன் இதழ் மூலமாக தமிழ் நாடு, மட்டுமன்றி மைசூர், கோலார், ஹைதராபாத், ரங்கூன், மலேசியா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழர்களுக்கும் பகுத்தறிவு சிந்தனை, இன உணர்வு, சமூக சிந்தனை, ஆகியவற்றை ஊட்டினார்.

⇒ கல்வியோடு, கைத்தொழில், வேளாண்மை, தையல், மரம் வளர்த்தல் போன்றவற்றையும் கற்க வேண்டும் என வலியுறுத்தினார்.

⇒ சங்க கால பெண்களைப் போலவே இக்கால பெண்களும் கல்வி கற்க வேண்டும் என கூறினார். போகர் 700, அகத்தியர் 200, சமிட்டு ரத்தின சுருக்கம், பாலவாகடம் ஆகிய நூல்களை பதித்துள்ளார்.

⇒ வாழும் முறை பற்றி அயோத்திதாசரின் கருத்துகள்:

⇒ மக்களும், அவர்தம் நோக்கங்களும், பெருமைப்பட தக்கவனாக இருக்க வேண்டுமானால், அவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பவர் மக்களுள் மாமனிதராக, அறிவாற்றல் பெற்றவராக, நன்னெறியை கடைப்பிடிப்பவராக, இருக்க வேண்டும். அப்படிப்பட்டவரையே மக்கள் கடவுள் என துதிப்பார்கள்.

⇒ மக்களும், மழையும்

⇒ வானம் பொய்ப்பதற்கு காரணம் ஒழுக்கம் உள்ள ஞானிகள் இல்லாமையே. ஞானிகள் இல்லாமைக்கு காரணம் நீதிநெறி மற்றும் வாய்மை நிறைந்த அறிவாளிகள் இல்லாமையே. அறிவாளிகள் இல்லாததற்கு காரணம் ஆட்சித்திறன் மற்றும் அன்புடைய அரசர்கள் இல்லாமையே. அத்தகைய அரசர்கள் இல்லாததற்கு காரணம் கல்வி, அறிவு, அருள், ஒழுக்கம், ஒற்றுமை ஆகியன உடைய குடிமக்கள் இல்லாமையே. நல்ல குடிமக்கள் இல்லாத நாட்டுக்கு இயற்கை கூட உதவாது என்றார்.

⇒ சமத்துவம் குறித்து அவருடைய கருத்துக்கள்

⇒ கல்வி, வேளாண்மை, காவல்துறை, ஊராட்சி, நகராட்சி, சட்டமன்றம், நாடாளுமன்றம், ஆகியவற்றிலிருந்து பௌத்த, கிருத்துவர், இஸ்லாமியர், ஆங்கிலேயர், இந்திய ஐரோப்பியர் போன்ற அனைவருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றார்.

⇒ திராவிட மகாஜன சங்கம் ஒடுக்கப்பட்டோர் உரிமைகளை பாதுகாப்பதற்காக 1892 ஆம் ஆண்டு திராவிட மகாஜன சங்கம் என்ற அமைப்பை தோற்றுவித்தார். சாலைகள் அமைத்தல், கால்வாய்கள் பராமரித்தல், குடிகளின் பாதுகாப்பிற்காக காவல்துறையினரை நியமித்தல், பொது மருத்துவமனைகள் அமைத்தல், சிற்றூர்கள் தோறும் கல்விக்கூடங்கள் அமைத்தல் போன்றவற்றிற்காக இந்த அமைப்பு போராடியது.

⇒ சுயராஜ்யம் குறித்து அயோத்தியாதாசரின் கூற்று

⇒ சுயராஜ்யத்தின் நோக்கம் அதிகாரத்தை கைப்பற்றுவதாக மட்டும் இருக்கக்கூடாது. மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியை உள்ளடக்கியதாக அஃது அமைய வேண்டும்.

⇒ மக்கள் வாழ்க்கையில் மாற்றம் உண்டானாலொழிய நாடு முன்னேற முடியாது என்று கூறினார்.

⇒ அயோக்கியதாசரின் படைப்புகள்

⇒ புத்தரது ஆதி வேதம் என்னும் நூலை 28 காதைகள் கொண்ட பெருநூல் ஆக எழுதினார்.

⇒ அந்நூலுக்கு சான்றாக பெருங்குறவஞ்சி, வீரசோழியம், நன்னூல் விளக்கம், திருக்குறள், சித்தர் பாடல்கள், வைராக்கிய சதகம், மச்சமுனிவர் ஞானம், முதலிய நூல்களை துணை நூல்களாக கொண்டார்.

⇒ இவரது இந்திரதேச சரித்திரம் என்ற நூல் பாராட்டத்தக்கது. எழுத்து சீர்திருத்தமும் செய்துள்ளனர். திருவாசகத்திற்கு உரை எழுதியுள்ளார். இவர் இலக்கியச் செல்வம் என்று சிறப்பிக்கப்பட்டார்.

⇒ விவாக விளக்கம், புத்தர் சரித்திரப் பா ஆகிய நூல்களை எழுதியுள்ளார். திருவள்ளுவர், ஔவையார் ஆகியோரின் படைப்புகளுக்கு பௌத்த கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய விளக்கங்களை எழுதியுள்ளார்.

⇒ உங்களுடைய தருமமும் கருமமும் உங்களை காக்கும் என்பது இவரது கூற்றாகும். மே அஞ்சு 1914–ல் உயிர் நீத்தார்.

⇒ அயோத்திதாசர் குறித்து தந்தை பெரியாரின் கூற்று

⇒ என் பகுத்தறிவு பிரச்சாரத்திற்கும் சீர்திருத்த கருத்துக்களுக்கும் முன்னோடிகளாக திகழ்ந்தவர்கள் பண்டிதமணி அயோத்திதாசரும், தங்கவேல் அப்பாதுறையாரும் ஆவார்கள். சென்னை தாம்பரத்தில் உள்ள சித்த மருத்துவ ஆராய்ச்சி மையத்துடன் இணைந்துள்ள மருத்துவமனைக்கு அயோத்திய தாச பண்டிதர் மருத்துவமனை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## 13. குணங்குடி மஸ்தான் சாகிபு

| | |
|---|---|
| இயற்பெயர் | சுல்தான் அப்துல் காதர் |
| சிறப்பு | **மாதவஞ்சேர் மேலோர் வழுத்தும் குணங்குடியான்** என்று புலவர்களால் பாராட்ட பெற்றவர். |
| இயற்றிய நூல்கள் | பாராபரக்கண்ணி, எக்காலக் கன்னி, மனோன்மணி கன்னி, நந்தீஸ்வர கன்னி |

⇒ இவர் தாம் இளவயதிலேயே முற்றும் துறந்தவராய் வாழ்ந்தார்.

⇒ சதுரகிரி, புறாமலை, நாகமலை, முதலிய மலைப்பகுதிகளில் தனித்திருந்து ஞானம் பெற்றார்.

⇒ தாயுமானவரின் பாடல்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டு அவருடைய பாராபரக் கண்ணியைப் போலவே ஓசை நியமிக்க இஸ்லாமிய பாடல்களை இயற்றினார்.

⇒ இவரது பாடல்கள் உண்மை நிலை உணர்த்தி என்றும் அழியா பேரின்ப பெருவாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்வன.

⇒ இவர் குருநிலை, தவநிலை, துறவு நிலை, நியம நிலை, காசி நிலை, தியான நிலை, சமாதி நிலை என பொருள் தரும் வகையில் பாடல்கள் பல இயற்றி தமிழுக்கு தொண்டாற்றியுள்ளார்.

⇒ திருத்தணி சரவணப்பெருமாள் என்ற புலவர் இவர் மீது கொண்ட பற்றினால் நான்மணிமாலை ஒன்றை பாடியுள்ளார்

⇒ அந்நூலில் மடல சூல்புவியில் உளத்திருளைக் கருணை ஒளியினாற் களைந்து, விடல் சூழ் –பவரின் குணங்குடியான் மிக்கோன் எனக்கு ஓர் தடையுள்ளதோ ? என கேட்கின்றார். தடை உண்டு என உரைப்பார் தமிழ் உலகில் இல்லை என்பதே உண்மை என்று கூறினார்.

## 14. ஆபிரகாம் பண்டிதர்

| | |
|---|---|
| பெற்றோர் | முத்துசாமி அண்ணன் |

| | |
|---|---|
| ஊர் | அண்ணாமலை அம்மாள் தென்காசிக்கு அருகே உள்ள சாம்பவர் கடை வடகரை |
| காலம் | 02–08–1859முதல் 31-08-1930 வரை |
| பணி | ஆசிரியர். |

⇒ இவர் இசை தமிழுக்கு பெருந் தொண்டாற்றியவர்.

⇒ இளமையிலே புகைப்படக்கலை, அச்சுக்கலை, ஜோதிடம், மருத்துவம், இசை ஆகிய திரைகளில் பெரும் விருப்பம் கொண்டு அதன் நுட்பங்களை பயின்றார்.

⇒ திண்டுக்கலில் ஆசிரியராக பணியாற்றும் போது சித்த மருத்துவத்தில் தேர்ச்சி பெற்றார்.

⇒ அவரை மக்கள் அன்புடன் பண்டுவர் (மருத்துவர்) என அழைத்தனர். பின்னர் தஞ்சையில் குடியேறி, அங்கு பண்டைய தமிழ் நூல்களை எல்லாம் ஆழ்ந்து கற்று சங்கீத வித்யா மகாஜன சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி தமது சொந்த செலவில் தமிழிசை மாநாடுகளை நடத்தினர்.

⇒ அவரை அங்குள்ள மக்கள் பண்டிதர் என அழைத்தனர்.

⇒ இவருடைய இசை தமிழ் தொண்டின் சிகரமாக இவருடைய கருணாமிர்த சாகரம் என்ற நூல் 1917–இல் வெளிவந்தது.

**15. <u>சி.வை.தாமோதரனார்:</u>**

⇒ இவர் இலங்கை யாழ்ப்பாணத்தில் பிறந்தவர் காலம் 1832 முதல் 171 வரை ஆகும் தமிழ் பதிப்பு உலகின் தலைமகன் என்று போற்றப்பட்டார்.

**<u>தமிழ் தொண்டுகள் :</u>**

⇒ தன் இருபதாவது அகவையிலேயே தமிழகத்திற்கு வருகை புரிந்து **நீதிநெறி** விளக்கம் என்னும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டார்.

⇒ 1868–ல் தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு சேனாவரையர் உரையை வெளியிட்டார். பின்னர் கலித்தொகை, இறையனர் அகப்பொருள், வீரசோழியம் உள்ளிட்ட பல நூல்களில் பதிப்பித்து வெளியிட்டார்

⇒ கட்டளைக் கலித்துறை, நட்சத்திரமாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

⇒ ஆறாம் வாசகப்புத்தகம் முதலிய பள்ளி பாடநூலை எழுதியுள்ளார். பெர்சிவல் பாதிரியார், அவரை தாம் நடத்திய தினவர்த்தமானி எனும் நூலுக்கு ஆசிரியர் ஆக்கினார். அவ்வயம் அவர் ஆங்கிலேயர் பலருக்கும் தமிழ் கற்றுத் தந்தார்.

⇒ சென்னை மாநில கல்லூரியில் தமிழ் பண்டிதராக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார்.

**<u>வழக்கறிஞர் பணி</u>**

பி.எல்.தேர்வில் தேர்ச்சிப் பெற்று கும்பகோணத்தில் வழக்கறிஞராக பணியாற்றி, பின்னர் 1884 இல் புதுக்கோட்டை நீதிபதியாக பணியாற்றினார்.

**16. <u>பெ. நா. அப்புசாமி</u>**

| | |
|---|---|
| **ஊர்** | பெருங்குளம் திருநெல்வேலி மாவட்டம் |
| **காலம்** | 31-12-1891 முதல் 16-05-1986 வரை |
| **சிறப்பு பெயர்கள்** | • அறிவியல் தமிழர்<br>• தமிழ்ப்பேரவை செம்மல் (மதுரை பல்கலைக்கழகம் வழங்கியது)<br>• அறிவியல் தமிழின் முன்னோடி |
| **புனைப் பெயர்** | பேனா |
| **சிறப்புகள்** | தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், ஆகிய பன்மொழி புலமை கொண்டவர். |



www.tnpscgroup4.in

அறிவியல் தமிழுக்காக 70 ஆண்டுகள் தொண்டாற்றியவர்.

**இவரின் அறிவியல் கட்டுரைகள்**

- தமிழர்நேசன்,
- கலைமகள்
- பாரத மணி
- அமுதசுரபி

**வெளிவந்த இதழ்கள்**

- பிரசண்ட விகடன்
- சுதேசமித்திரன்.

**இயற்றிய நூல்கள்**

- மின்சாரம்
- வானக் காட்சி
- இன்றைய விஞ்ஞானமும் நீங்களும்
- அணுசக்தியின் எதிர்காலம்
- ராக்கெட்டும் துணைக்கோள்களும்.

**மொழிபெயர்ப்பு நூல்கள்**

பாரதியார் கவிதைகள், சங்க பாடல்கள் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். மேலும் 25 அறிவியல் நூல்களை தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

**இவர் உருவாக்கிய தமிழ் தொடர்கள்**

- பொங்கியெழு கேணி (Artesian Well)
- நுண் துகள் கொள்கை (Corpuscullar Theory)
- அறிவுக்குறி எண் (Intelligent Quotient)

⇒ இவர் பல இசை விமர்சன கட்டுரைகளையும் எழுதியுள்ளார். நிறுவன அதிபரான எஸ்.ராஜம் பல தமிழ் இலக்கியங்களை தொகுப்பாக கொண்டு வந்த போது அவை செம்மையாக வெளிவர உறுதுணையாக இருந்தார்.

### 17. இரசிகமணி டி.கே.சிதம்பரநாதர்

| | |
|---|---|
| **பெற்றோர்** | தீத்தாரத்தர்– மீனாம்பாள் |
| **காலம்** | 11-09-1882 முதல் 16-02-1954 வரை |
| **ஊர்** | திருநெல்வேலி |
| **பன்முகத்தன்மை** | வழக்கறிஞர், எழுத்தாளர், தமிழ் இலக்கியத் திறனாய்வு முன்னோடி |
| **எழுதிய நூல்கள்** | இதய ஒலி, கம்பர் யார்? |
| **உரை எழுதிய நூல்கள்** | முத்தொள்ளாயிரம் கம்பராமாயணம் |

⇒ டி.கே.சி.யின் வீட்டுக் கூடத்தில் மாலை வேலைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் டி. கே.சி மற்றும் அவரது நண்பர்கள் கூடி இலக்கியத்தை பற்றி கலந்துரையாடுவார்கள் அவ்வமைப்பு வட்டத் தொட்டி என்று பெயர் பெற்றது.

⇒ 1927–இல் சென்னை மாகாணத்தின் சட்டமன்ற மேலவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1930 முதல் 1935 வரை சென்னை மாகாண இந்து அறநிலைத்துறையின் பாதுகாப்பு ஆணையராகவும் பணியாற்றினார்.

⇒ ஒமந்தூர் ராமசாமி ரெட்டியார் சென்னை மாநில முதல்வராக இருந்தபோது, தமிழக அரசுக்கு ஏற்ற முத்திரை சின்னமாக திருவில்லுபுத்தூர் ஆண்டாள் கோயில் கோபுரத்தை பரிந்துரை செய்தார்.

### 18. தமிழ்த்திரு. இரா. இளங்குமரனார்

| | |
|---|---|
| **பெற்றோர்** | படிக்கராமர் வாழவந்தம்மையார் |
| **பிறப்பு** | 30-01-1927 |
| **ஊர்** | திருநெல்வேலி மாவட்டம், வாழவந்தாள்புரம் |
| **பன்முக சிறப்புகள்** | பள்ளி ஆசிரியர், தமிழறிஞர், நூலாசிரியர், பாவலர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர், இதழாசிரியர், உரையாளர் |

➢ இவருடைய சொல்லாராய்ச்சி திறனை கண்டு வியந்து பாவலர் பாராட்டியுள்ளார். திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலை ஒன்றை அமைத்துள்ளார்.

⇒ பாவணார் நூலகம் ஒன்றை உருவாக்கியுள்ளார்.

⇒ தமிழகம் முழுவதும் திருக்குறள் சொற்பொழிவுகளையும், தமிழ் வழி திருமணங்களையும் நடத்தி வருகிறார்.

⇒ தமிழ் தென்றல் தெரிவிக்க அவர்களைப் போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலை கற்றுக் கொண்டவர்

**இவர் எழுதிய நூல்களில் சில**

- இலக்கண வரலாறு
- பாவணர் வரலாறு
- திருக்குறள் தமிழ் மரபுரை
- தமிழிசை இயக்கம்
- குண்டலகேசி உரை
- காக்கை பாடினிய உரை
- தனித்தமிழ் இயக்கம்
- புறத்திரட்டு உரை
- தேவநேயம்.

**19. <u>மா.போ.சிவஞானம்</u>**

| | |
|---|---|
| **பெற்றோர்** | பொன்னுசாமி–சிவகாமி |
| **ஊர்** | ஆயிரம் விளக்கு வட்டம், சால்வன் குப்பம்,சென்னை |
| **காலம்** | 26-06-1906 முதல் 03-09-1995 வரை |
| **நூல்கள்** | வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, கப்பலோட்டிய தமிழன், வீரபாண்டிய கட்டபொம்மன் |
| **ஆய்வு நூல்கள்** | சிலப்பதிகாரம், திருவள்ளுவர், ராமலிங்க அடிகளார், பாரதியார் |
| **பன்முக சிறப்புகள்** | சிலம்பு செல்வர் பேரவை செல்வர் |
| **விருதுகள்** | சாகித்திய அகாடமியிலிருந்து பத்மஸ்ரீ |
| **நடத்திய இதழ்கள்** | செங்கோல் தமிழ் முரசு |

⇒ பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் ஞானபிரகாசம். சரபையர் என்ற முதியவர் ஒருவர் இவரை 'சிவஞானி' என்று அழைத்தார் பின்னாலில் அப்பெயர் சிவஞானம் என நிலை பெற்றது

**<u>தமிழார்வம்</u>**

⇒ இவர் குடும்பத்தில் நிலவிய வறுமை காரணமாக பாட புத்தகங்கள் வாங்க இயலாத நிலையில் மூன்றாம் வகுப்பு தொடக்கத்தில் இவரது கல்வி முற்றுப்பெற்றது. தனது தாயாரின் மூலமாக பாலபாடங்களையும், அல்லி அரசாணி மாலை,பவளக்கொடி மாலை ஆகியவற்றைக் கற்றறிந்தார்.

⇒ சித்தர் பாடல்களை விரும்பி படித்தார். ஏட்டுக்கல்வி பெற இயலாத நிலையில் கேள்வி ஞானம் மூலமாக தனது தமிழறிவை வளர்த்துக் கொண்டார். இவருடைய கேள்வி ஞானத்தை அதிகமாக்கியதில் திருப்பாதிரி புலியூர் ஞானியாரடிகளுக்கு அதிக பங்குண்டு. பழைய புத்தக கடைகளில் மிக மிக குறைந்த விலைக்கு புத்தகங்களை வாங்கிவிட்டு, உணவுக்கு பணம் இல்லாமல் பல வேலை பட்டினி கிடந்துள்ளார்

**தமிழ் தொண்டு**

⇒ சிலப்பதிகாரத்தை தமிழகத்தின் பட்டித் தொட்டி எங்கும் கொண்டு சென்ற பெருமை உடையவர். பாரதியார் குறித்து பல ஆய்வு நூல்கள் எழுதி உள்ளார்.

⇒ சிலப்பதிகாரம் குறித்தும் பல நூல் ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் வ உ சி குறித்து எழுதிய நூல்கள் ஒன்றான கப்பலோட்டிய தமிழன் பின்னாளில் திரைப்படமாக வெளிவந்தது வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற இவருடைய நூலும் திரைப்படமாக வெளிவந்துள்ளது.

⇒ திருவள்ளுவர், ராமலிங்க அடிகளார் குறித்தும், ஆய்வு நூல்களை எழுதியுள்ளார்.

⇒ ஆங்கிலேயர் ஆட்சியில் இவர் கலந்து கொண்ட போராட்டங்கள்

⇒ இந்தியாவை விட்டு வெளியேறு (வெள்ளையனே வெளியேறு) வெளியேறுகின்ற போராட்டத்தில் கலந்து கொண்டதால் சிறையில் அடைக்கப்பட்டார்.

⇒ தமிழா துள்ளி எழு என்ற தலைப்பில் கையால் எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான பிரசுரங்களை கடற்கரையில் மக்களிடையே வழங்கியதால் 6 மாதங்கள் கடுங்காவல் தண்டனை அனுபவித்தார்.

⇒ காங்கிரஸ் கட்சியால் (பேராயக்கட்சி) நடத்தப்பட்ட ஊர்வலங்களையும், கதர் விற்பனையிலும் தவறாமல் பங்கு கொண்டு அதனால் பலமுறை சிறை சென்றுள்ளார்.

⇒ சுதந்திர இந்தியாவில் இவர் நடத்திய போராட்டங்கள்

⇒ மெட்ராஸ் ஸ்டேட் என்பதை மாற்றி தமிழ்நாடு என்ற பெயரை வைக்க போராடினார். மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது ஆந்திரர்கள் சென்னையைக் கேட்டனர். அதனை எதிர்த்து போராடி தமிழக தலைநகரமாக சென்னையை மாற்றியதில் வெற்றி கண்டார்.

⇒ தமிழகத்தின் வடக்கு எல்லையான திருப்பதியை இணைக்கப் போராடினார். அதில் வெற்றி கிடைக்கவில்லை. மாலவன் குன்றம் போனாலென்ன ? வேலவன் குன்றம் ஆவது எங்களுக்கு வேண்டுமென்று முழங்கினார். போராட்டத்தில் திருத்தணி தமிழகத்திற்கு கிடைத்தது. இப்போராட்டத்தில் தமிழாசான் மங்கலங்கிழார், விநாயகம், ஈ.எஸ். தியாகராஜன், ரஹீத் போன்ற இவருடன் இணைந்து போராடினர்.

⇒ குமரி மாவட்டம், செங்கோட்டை, பீர்மேடு, தேவிகுளம், அகத்தீஸ்வரம், கல்குளம், இலவங்காடு, நாகர்கோவில் ஆகிய பகுதிகளை இணைக்க போராடினார். இப்போராட்டத்தில் வெற்றி பெற்றாளும் தேவி குளம் பெருமையடி இரண்டும் கேரளத்துடன் இணைக்கப்பட்டன.

⇒ இப்போராட்டத்தில் மார்சல் நேசமணி, தேவ சகாயம், செல்லையா, தாணுலிங்கம், நதானியல், காந்திராமன் போன்றோர் இவருடன் இணைந்து போராடினர். திருவிதாங்கூர் அரசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தேவசகாயம், செல்லையா இருவரும் உயிர் நீத்தனர்.

**சிறப்புகள்**

⇒ ‘சிலம்புச் சில்வர்’ என்ற பட்டம் இவருக்கு ரா. சேதுப்பிள்ளை அவர்களால் வழங்கப்பட்டது. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்ற இவருடைய நூலுக்காக 1966–ல் மதுரை பல்கலைக்கழகம் பேரவை செல்வர் என்ற பட்டத்தை வழங்கியது.

⇒ மத்திய அரசு பத்மஸ்ரீ விருதினை வழங்கி சிறப்பித்துள்ளது. 1952 முதல் 1954 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தார். 1972 முதல் 1978 வரை சட்டமன்ற மேலவை தலைவராகவும் பதவி வகித்துள்ளார். 1954 இல் காங்கிரஸிலிருந்து வெளியேறி தமிழரசுக் கழகத்தை தொடங்கினார்.

## <u>மார்சல் ஏ.நேசமணி</u>

⇒ சமூக விடுதலைக்காகப் போராடியவர்; வழக்கறிஞர். நாகர்கோவில் நகர மன்ற தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். குமரி மாவட்ட போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர். இதனால் மார்ஷல் நேசமணி என அழைக்கப்பட்டார். 1956 நவம்பர் 1ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது. தமிழக அரசு நாகர்கோவிலில் இவருக்கு சிலையும், மணிமண்டபமும் அமைத்துள்ளது.

**<u>இறுதிக்காலம்</u>**

⇒ இவர் தனது 89 ஆவது அகவையில் அக்டோபர் 3 1995–ல் இயற்கை எய்தினார். தமிழக அரசு சென்னை தியாகராய நகரிலும், திருத்தணியிலும் இவருக்கு சிலை அமைத்துள்ளது.

## 20. மாயூரம் வேதநாயகம்

⇒ காலம் 1826 முதல் 1889 வரை

⇒ இவர் தமிழ் மொழியின் முதல் புனிதமான பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதியவர்.

⇒ இவர் நீதிபதியாக பணியாற்றிய மாயவரத்தில் நகர்மன்ற தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

⇒ கி.பி 1805 முதல் கி.பி 1861 வரையுள்ள ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்ற தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழி பெயர்த்து சித்தாந்த சங்கிரகம் என்ற நூலாக வெளியிட்டார்.

⇒ பெண்மதிமாலை

⇒ திருவருள் அந்தாதி

⇒ சர்வ சமய சமரச கீர்த்தனை

⇒ சுகுணசுந்தரி

⇒ நீதி நூல்

⇒ நீதி பேதம் முதலிய நூல்களையும் பல தனி பாடல்களையும் இயற்றியுள்ளார்.

⇒ இசையிலும், வீணை வாசிப்பதிலும், வல்லவராக திகழ்ந்த இவர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றி உள்ளார்.

⇒ வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளை கற்று அறிந்தார் பெண் கல்விக்கு குரல் கொடுத்த முக்கிய மிக முக்கியமாக ஆளுமையாக கருதப்படுகிறார்.

⇒ 19–ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக் கொடிய தாது வருட பஞ்சத்தின் போது (1876– 1878) தனது சொத்துகள் அனைத்தையும் கொடையாக அளித்தார். இதனைப் போற்றும் விதமாக கோபாலகிருஷ்ண பாரதியார் “நீயே புருஷமேரு” என்ற பாடலை இயற்றி இவரை பெருமைப்படுத்தினார்.

## 21. சோமசுந்தர பாரதியார்

⇒ காலம் 1879 முதல் 1959 வரை

⇒ இவர் சிறந்த பேச்சாளர், சமூக சீர்திருத்தவாதி, விடுதலை போராட்ட வீரர், இலக்கிய ஆய்வாளர் என பன்முக ஆளுமை கொண்டவர்.

⇒ இவர் வழக்கறிஞர் தொழிலை விட்டு விட்டு வ. உ.சி–யின் அழைப்பை ஏற்று 100 ரூபாய் சம்பளத்தில் சுதேசி கப்பல் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார்.

⇒ என்னிடம் இரண்டு சரக்கு கப்பலோடு மூன்றாவதாக ஒரு தமிழ் கப்பலும் உள்ளது என வ.உ.சி பெருமையாக இவரை குறிப்பிடுவார்.

⇒ அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழ் துறை தலைவராக பணியாற்றினார். இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்றார்.

⇒ சடங்குகள் இல்லாத சமூக சீர்திருத்த திருமண விழாக்களை முன்னின்று நடத்தினார்.

### இவருடைய படைப்புகள்

⇒ தசரதன் குறையும், கைகேயி நிறையும்

⇒ திருவள்ளுவர்

⇒ சேரர் தாயமுறை

⇒ தமிழும் தமிழரும்

போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார். **தொல்காப்பிய பொருளாதார மேம்பாட்டியல்** உரை எழுதியுள்ளார்.

### சிறப்புகள்

✓ ஒருமுறை எட்டயபுர அரண்மனையில் யாழ்ப்பாண புலவர் ஈற்றடி ஒன்றை கொடுத்து கவிதை எழுதும் போட்டியை நடத்தினார். பலரும் பாடல் இயற்றி கொடுக்க, அப்புலவர்

www.tnpscgroup4.in



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

இரண்டு பாடல்களை மட்டும் சிறந்தவையாக தேர்ந்தெடுத்தார். இப்பாடலை எழுதிய இருவருக்கும் பாரதி என்ற பட்டத்தை வழங்கினார். ஒருவர் சுப்ரமணிய பாரதி மற்றொருவர் சோமசுந்தர பாரதி இருவருமே சிறந்த நண்பர்கள் ஆவர்.

⇒ வ.உ.சி, சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீது ஆங்கிலேய அரசு போட்ட வழக்குகளில் அவர்களுக்காக இவர் வாதாடியது குறிப்பிடத் தகுந்தது.

## 22. வை.மு.கோதைநாயகி

⇒ காலம் –1901–1960

⇒ 'குடும்பமே உலகம்' என்று பெண்கள் வாழ்ந்த காலகட்டத்தில் வீட்டிற்கு வெளியே உலகம் உண்டு என்பதை பெண்களுக்கு தன் வாழ்வின் மூலம் இனங்காட்டிய பெருமைக்குரியவர் வை. மு.கோதைநாயகி அவர்கள்.

⇒ இவர் ஐந்தரை வயதிலேயே திருமணம் செய்து கொடுக்கப்பட்டவர் தன் குடும்பத்தாரிடமே கல்வி கற்றவர்.

⇒ இவருடைய கற்பனை ஆற்றலை படைப்பாற்றலாக முயற்சி எடுத்தவர் இவருடைய கணவர் ஆவார்.

⇒ இவர் சொல்ல சொல்ல இவருடைய தோழி எழுதுவார். இவருடைய முதல் படைப்பு 'இந்திர மோகனா' என்ற நாடக நூல் ஆகும்.

⇒ இவர் 'ஜகன்மோகினி' என்ற இதழை 35 ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார். 115 நாவல்களை எழுதியுள்ளார்.

⇒ பெண் நிறத்தாளர்களையும், வாசகத் வட்டத்தையும் உருவாக்கினார். காந்தியத்தின் மீது பற்றும் உறுதியும் கொண்டிருந்தவர்.

⇒ தன் எழுத்துக்களால் மட்டுமின்றி மேடைப் பேச்சுகளாலும் காந்திய கொள்கைகளை பரப்புரை செய்தார். விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சிறைக்கு சென்றார்.

⇒ வைத்தமாநிதி முடும்பை கோதநாயகி என்பதன் சுருக்கப் பெயரே வை.மு.கோ என்பதாகும்.

⇒ தன் சமகால எழுத்தாளர்களால் நாவல் ராணி, கதாமோகினி, ஏக அரசி என்றெல்லாம் பாராட்ட பெற்றார்.

## 23. மா.இராச மாணிக்கனார்

⇒ காலம் – 1907 முதல் 1967 வரை

⇒ இவரது தந்தை அரசு பணியாளர் என்பதால் பல ஊர்களில் பணியாற்ற வேண்டியிருந்தது. எனவே, இவர் நான்காம் வகுப்பு வரை கர்நூல், சித்தூர் முதலிய ஊர்களில் தெலுங்கு மொழியையே பயின்றார்.

⇒ தந்தையின் மறைவுக்கு பின்னர் தமையனாரால் வளர்க்கப்பட்ட இவர் தனது படிப்பை பாதியில் விட்டுவிட்டு தையல் கடையில் வேலைக்குச் சேர்ந்தார். அவரால் அத்தொழிலில் தொடர்ந்து ஈடுபட முடியவில்லை.

⇒ தனது 15–வது வயதில் தஞ்சாவூர் செயிண்ட் பீட்டர் பள்ளி தலைமை ஆசிரியரின் உதவியால் மீண்டும் பள்ளி படிப்பை தொடர்ந்தார்.

⇒ பல நெருக்கடிகளுக்கு இடையே பயின்ற இவர் பள்ளியில் முதல் மாணவராக தேர்ச்சி பெற்றார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய பள்ளி இறுதி தமிழ் தேர்விலும் முதல் மாணவராக தேர்ச்சி பெற்றார்.

⇒ பின்பு எழுத்தர், பள்ளி ஆசிரியர், பல்கலைக்கழக ஆசிரியர் என பல வளர்ச்சி நிலைகளை அடைந்தபோதும், இலக்கியம், சமயம், வரலாறு, கல்வெட்டு ஆகிய துறைகளில் மிளிர்ந்தார்.

⇒ இவர் எழுதிய **நாற்பெரும் வள்ளல்கள்** என்ற நூல் 1930-ல் வெளிவந்தது. சங்ககாலம் தொடங்கி பிற்கால சோழர்கள் வரையிலான

சோழர் வரலாற்றை முழுமையாக ஆராய்ந்தார்.

⇒ சிந்துவெளி நாகரிகம் பற்றி தமிழில் முதன் முதலில் மொகஞ்சதரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் என்ற நூலை இயற்றியுள்ளார்.

⇒ கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர்களான வே. உமா மகேஸ்வரன், ந.மு.வேங்கடசாமி, ஆகியோராலும், உ.வே.சாமிநாதர் போன்ற தமிழறிஞர்களாலும் வழி நடத்தப்பட்ட இவர் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

<u>அவற்றுள் முக்கிய மிக முக்கியமாக கருதப்படவை :</u>

- ✓ சோழர்
- ✓ வரலாறு
- ✓ பல்லவர் வரலாறு
- ✓ பெரிய புராண ஆராய்ச்சி
- ✓ தமிழ்நாட்டு வட எல்லை
- ✓ பத்துப்பாட்டு ஆராய்ச்சி
- ✓ தமிழக கலைகள்
- ✓ தமிழ் இனம்
- ✓ சிலப்பதிகாரகாட்சிகள்
- ✓ ஹர்ஷாவர்த்தனன்
- ✓ முடியுடை மூவேந்தர்
- ✓ ஏப்ரஹாம் லிங்கன்
- ✓ முசோலினி

போன்றவையாகும். 2006, 2007-ல் இவருடைய நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

## 24. <u>மயிலை சீனி. வேங்கடசாமி</u>

| | |
|---|---|
| **ஊர்** | சென்னை |
| **காலம்** | 16-12-1990 முதல் 8-07-1980 வரை |
| **அறிந்திருந்த மொழிகள்** | ஆங்கிலம், மலையாளம் கன்னடம் |
| **பணி** | பள்ளி ஆசிரியர் |
| **பன்முக சிறப்புகள்** | வரலாற்றாசிரியர், நடுநிலைப் பிறழாத ஆய்வாளர், மொழியியல் அறிஞர், இலக்கிய திறனாய்வாளர். |

**படைப்புகள்**

✓ **கட்டுரைகள்**
- ராமேஸ்வர தீவு
- உறையூர் அழிந்த வரலாறு
- மறைந்து போன மருங்காபட்டினம்

✓ **நூல்கள்**
- கொங்கு நாட்டு வரலாறு
- துளுவநாட்டு வரலாறு
- சேரன் செங்குட்டுவன்
- மகேந்திரவர்மன்
- நரசிம்மவர்மன்
- மூன்றாம் நந்திவர்மன்

✓ **ஆய்வு நூல்கள்**
- களப்பிரர் கால தமிழகம்
- கிறிஸ்தவமும் தமிழும்
- சமணமும் தமிழும்
- பௌத்தமும் தமிழும்
- மறைந்து போன தமிழ் நூல்கள்

⇒ தமிழ் மொழியில் மறந்து போன மறைந்து போன அளவு கடந்த செய்திகளை உலகறிய செய்தவர். தமிழ் ஆய்வு வரலாற்றில் அழியாச் சிறப்பிடம் பெற்றவர்.

⇒ இவருடைய களப்பிரர் கால தமிழகம் என்னும் ஆய்வு நூல் இருண்ட காலம் என்று ஆய்வாளர்களால் வர்ணிக்கப்பட்ட களப்பினர் காலத்திற்கு ஒலியூட்டி வரலாற்று தடத்தை செப்பனிட்டது.



www.tnpscgroup4.in

⇒ 1980–இல் மதுரை பல்கலைக்கழகம் தமிழ் பேரவை செம்மல் எனும் பட்டத்தை இவருக்கு அளித்து பாராட்டியது.

⇒ இவரது தந்தை சீனிவாசன் சித்த மருத்துவர், இவரது தமையனார் கோவிந்தராசன் தமிழாசிரியர்.

⇒ மயிலை.சீனி.வேங்கடசாமி அவர்கள் தொடக்கப்பள்ளியில் 25 ஆண்டுகள் ஆசிரியராக பணிபுரிந்தார்.

⇒ தமிழ் இன வரலாறு, இலக்கியம், தொல்லியல், கல்வெட்டு, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படைகளில் தரவுகளைத் தேடி எழுதிய முக்கிய ஆளுமைகளில் முக்கியமானவர்.

⇒ விபுலானந்த அடிகள், கா.சுப்பிரமணியர், திரு.வி.க., தொ.போ.மீ, சத சற்குணர் ஆகிய அறிஞர் பெருமக்களுடன் தொடர்பு கொண்டிருந்தவர். .

**இவருடைய ஆய்வு கட்டுரைகள் வெளியான இதழ்கள்**

- குடியரசு
- ஊழியன்
- செந்தமிழ் செல்வி
- ஆரம்பாசிரியன்
- லெட்சுமி

⇒ ‘கிறிஸ்துவமும் தமிழும்’ என்பது இவருடைய முதல் நூலாகும். பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும், ஆகிய நூல்களை காழ்ப்புணர்வின்றி எழுதியுள்ளார்.

⇒ வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ் பிராமி எழுத்து, கிரந்த எழுத்து ஆகியவற்றில் புலமைப் பெற்றிருந்தார்.

⇒ கி.பி மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்த மன்னர்களை பற்றி ஆய்வு செய்து பல நூல்களை எழுதி உள்ளார்.

⇒ அவற்றில் மகேந்திர வர்மன், நரசிம்ம – வர்மன் மூன்றாம் நந்தி வர்மன், சங்ககால மூவேந்தர்கள், கொங்கு நாட்டு மன்னர்கள், துளு நாட்டு மன்னர்கள், களப்பிரர், இலங்கை குறித்த வரலாறு போன்றவை குறிப்பிடத்தக்க நூலாகும்.

⇒ மூன்றாம் நந்திவர்மன் என்ற நூல் தமிழில் அம்மன்னனை பற்றி எழுதப்பட்ட முதல் நூலாகும்.

⇒ களப்பிரர் ஆட்சியில் தமிழகம் என்ற நூல் மூலம் களத்திரர் கொடுத்த புதிய கண்ணோட்டத்தைவெளிப்படுத்தியுள்ளார்.

⇒ தமிழர் வளர்த்த அழகு கலைகள் என்ற இவருடைய நூல் கவின் கலைகள் குறித்து தமிழில் வெளிவந்த முதல் நூலாகும். கலைகள் குறித்து இவர் எழுதிய பிற நூல்களாவன:

- இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்
- நுண்கலைகள்
- இசைவாணர் கதைகள்

⇒ தமிழ்நாட்டு வரலாறு என்னும் இவருடைய நூல் மீட்டுருவாக்க முயற்சிக்கு சரியான சான்றாகும். சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டு இந்நூலை அவர் எழுதியுள்ளார். துளு மொழியையும், தமிழ் மொழியையும் ஒப்பீடு செய்து ஆய்வு நூலை எழுதியுள்ளார்.

⇒ 19–ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம் என்னும் இவருடைய நூல் ஒவ்வொரு நூற்றாண்டிலும் எவ்வகையில் ஆவணப்படுத்துவது என்பதற்கான முன்னோடி நூலாகும்.

⇒ மறைந்து போன தமிழ் நூல்கள் என்ற நூலில் மறைந்து போன 333 நூல்கள் தொடர்பான குறிப்புகளை கொடுத்துள்ளார்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

⇒ சாசன ஆயுள் மஞ்சரி என்பது இவரது ஆய்வு நூல்களுள் ஒன்றாகும்.

⇒ செந்தமிழ் செல்வி எனும் இதழில் அவர் எழுதிய சொல்லாய்வு கட்டுரைகள் அஞ்சிறைத் தும்பி என்ற தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

⇒ மகேந்திரவர்ம பல்லவன் இயற்றிய மத்த விலாச பிரகசனம் என்னும் நாடக நூலை ஆங்கில வழியாக தமிழாக்கியுள்ளார்.

⇒ மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பயிற்சி பெற்றிருந்தார்.

⇒ சங்க கால பசும்பூண் பாண்டியன் என்ற மன்னன் தன் கொடியில் யானை சின்னத்தை பொறித்திருந்தான் என்ற செய்தி அகநானூற்றில் (162) இருப்பதை முதன் முதலில் வெளிப்படுத்தினார்.

**இவருடைய கூற்றுகள்**

⇒ "தமிழ்ப்பற்று முன்னோர் வழியாக எனக்கு கிடைத்த சீதனம்"

⇒ தற்காலத்து தமிழ்ச்சமூகம் தனது பழைய அழகுக் கலை செல்வங்களை மறந்து, தன் பெருமை தான் அறியாச் சமூகமாக இருந்து வருகிறது.

⇒ **'கலை'** என்று கூறப்படுவதெல்லாம் சினிமாக்கலை, இசைக்கலை பற்றியே; இலக்கியக் கலை அதிகமாக பேசப்படுவதில்லை.

**தமிழர் வளர்த்த அழகு கலைகள் என்ற நூலின் முன்னுரை**

⇒ "நான் கதைகளையும், நவீனங்களையும் எழுதுகிறவன் அல்லன். வரலாற்று ஆராய்ச்சி நூல்களையும், தமிழ் இலக்கிய ஆராய்ச்சி நூல்களையும், எழுதுகிறவன். ஆராய்ச்சி நூல்களை சிறுபான்மையோரே படிக்கின்றனர் என்று தெரிந்து எழுதுகிறேன்."

**பாராட்டுரைகள்**

**பாவேந்தர் பாரதிதாசன்**

தாங்கெட நேர்ந்த போதும்
தமிழ்கெட லாற்றா அண்ணல்
வேங்கட சாமி என்பேன்
விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாக கொண்டேன்
வீங்கிட மாட்டான் கல்வி
விளம்பரம் விழைதல் இல்லான்.

**நாரண.துறைக்கண்ணன்**

"ஐந்தடிக்கு உட்பட்ட குரல் வடிவம்"

**சுவாமி விவேகானந்த அடிகள்**

⇒ "மயிலை சீனி.வேங்கடசாமி ஆண்டில் இளைஞராக இருந்தாலும் ஆராய்ச்சி துறையில் முதியவர்; நல்லொழுக்கம் வாய்ந்தவர். நல்லோருடைய கூட்டுறவை பொன் போல் போற்றுபவர்"

**விருதுகளும் பட்டயங்களும்**

⇒ 1962 இல் தமிழ் எழுத்தாளர் சங்கம் பாராட்டி கேடயம் வழங்கியது.

⇒ மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் தமிழ் பேரவை செம்மல் என்ற பட்டத்தை வழங்கியது.

⇒ அறிஞர்கள் பலர் கூடி சென்னை கோகலே மண்டபத்தில் மணிவிழா எடுத்து ஆராய்ச்சி பேரறிஞர் என்ற பட்டத்தினை வழங்கினர்.

⇒ திருமணமே செய்து கொள்ளாமல் தம் வாழ்வை முழுமையாக தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கிய இப்பெருமகனார் 8–07–1980 இல் இயற்கை எய்தினார்.

**25. தவத்திரு குன்றக்குடி அடிகளார்**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| **இயற்பெயர்** | அரங்கநாதன் |
| **பெற்றோர்** | திரு.சீனிவாசன்-சொர்ணத்தாட்சி அம்மையார் |
| **பிறந்த ஊர்** | மயிலாடுதுறை அருகில் உள்ள திருவிழா கூத்தனூர் |
| **காலம்** | 1925 முதல் 1995 வரை |
| **பெற்ற விருது** | தமிழ்நாடு அரசின் திருவள்ளுவர் விருது 1986 ஆம் ஆண்டு முதன் முதலாக இவருக்குத்தான் வழங்கப்பட்டது. |

⇒ **1989–**ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியது.

⇒ **1993–**ல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் தமிழ் பேரவை செம்மல் விருது வழங்கி சிறப்பித்தது.

**<u>படைப்புகள்</u>**

⇒ நாயன்மார் அடிச்சுவட்டில்

⇒ குறட்செல்வம்

⇒ ஆலயங்கள் சமுதாய மையங்கள் உள்ளிட்ட பல நூல்களை எழுதி உள்ளார்.

⇒ ஆலயங்கள் சமுதாய மையங்கள் என்ற நூல் தமிழ்நாடு அரசின் முதல் பரிசினை பெற்றது.

www.tnpscgroup4.in